

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.09.2024) பாரிஸில் நடைபெற்ற பாராலிம்பிக்ஸில் T63 பிரிவு உயரம் தாண்டுதலில் வெண்கல பதக்கம் பெற்ற மாரியப்பன் தங்கவேலுவிற்கு வாழ்த்து தெரிவித்து நினைவு பரிசு வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் பயிற்றுநர் சத்யநாராயணா உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.09.2024) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பாராட்டு நிகழ்ச்சியில், கடந்த ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் (FORMULA 4 INDIAN CHAMPIONSHIP AND INDIAN RACING LEAQUE) கார் பந்தயத்தின் போது, பணியாற்றிய தூய்மைப் பணியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன். பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

### கழகத் தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன் –

# பா.பொன்னையன் ஐ.ஏ.எஸ். இல்லத் திருமண விழா!

### அமைச்சர்கள் துரைமுருகன் – கே.என்.நேரு – ஐ.பெரியசாமி – எஸ்.ரகுபதி – சிவ.வீ. மெய்யநாதன் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் – எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் – அரசு அதிகாரிகள் – கழக முன்னணியினர் நேரில் வாழ்த்து!

புதுக்கோட்டை, செப்.14-

கழகத் தீர்மானக் குழு செயலாளரும் முன்னாள் மாநில வேளாண்மை விற்பனைக் குழு வாரிய தலைவருமான அக்ரி கே.பி.டி.கணேசன் தம்பியும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை இயக்குனருமான பா. பொன்னையா ஐ.ஏ.எஸ்., மகள் திருமணம் 8ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டினத்தில் உள்ள மணமகன் இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினருமான பால்சாமி அவர்களின் பேத்தியும், கழகத் தீர்மான குழு செயலாளர் அக்ரி கே.பி.டி.கணேசன் தம்பி பா.பொன்னையா ஐஏஎஸ், இ.சிநேகலதா தம்பதியின ரின் மகள் டாக்டர் பா.சௌதாமினி, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டச் முத்துப்பட்டினம் எஸ். ராமச்சந்திரன், கீதா தம்பதியரின் மகன் பொறியாளர் ரா.பாலசண்முகம் ஆகியோரின் திருமணம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா முத்துப்பட்டினத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர்கள் எஸ். ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், சிவ.வீ.மெய்யநாதன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், எம்.பிக்கள் திருச்சி சிவா, டி.எம்.செல்வகணபதி, தங்க தமிழ்ச்செல்வன், எம்.எம்.அப்துல்லா, ஜோதிமணி, துரை வைகோ, கார்த்திக் சிதம்பரம், நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை. முத்துராஜா, பனமரத்துப்பட்டி ராஜேந்திரன், மாங்குடி, விடுதலை சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் எம்.பி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சி தலைவர் அருணா ஐ.ஏ.எஸ், செ. ராஜேந்திரன் ஐபிஎஸ், திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், தஞ்சை மாநகராட்சி மேயர் சன் ராமநாதன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், ராமச்சந்திரன், ராமசாமி, புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், த.சந்திரசேகரன். சுப. சரவணன், சு.சண்முகம், மிசா சி.ராமநாதன், செ. அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், பரணி இ.ஏ. கார்த்திகேயன், அரு. வீரமணி, அழ.சுப்பிரமணியன், க.மதியழகன்,

பி.ராஜேஸ்வரி, எஸ். எஸ்.கருப்பையா, ஞான. இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, எம். லியாகத் அலி, அபுதாஹீர், ஆர்.ஆர்.கே. கலைமணி, இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், தென்னலூர் எம்.பழனியப்பன், என். சாத்தையா, இராசு.சந்தோஷ், சி.ஆர்.வி. சித்ரா, எம்.செந்தில்குமார், ஆர்.வி.செல்வம், கலைவாணி சுப்பிரமணியன், என்.வீரய்யா, ஆர். செல்லத்துரை. த. மணிராஜன், க.ராஜேந்திரன், தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான்பாண்டியன், கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், பொன்.ராமலிங்கம், எம். பரமசிவம், வெ.முத்துக் கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, என். சேட்டு, ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து. ஒ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், அ. இளங்குமரன், கே.பி. அய்யப்பன், சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், கே. பி.கே.டி.தங்கமணி, சக்தி ராமசாமி, வே.பொன்துரை, பொன்.கணேசன், அ.முத்து, அரு.வடிவேல், அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், வி.ஆர். இளையராஜா, எஸ்.எம். சீனியார், கே.எஸ்.ரவி, எல். குமார், உ.முருகேசன், அ. அழகப்பன், கே.சி.சிவக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், ஆ.பழனிக்குமார், பி. அண்ணாத்துரை, ஜெயலெட்சுமி தமிழ்ச் செல்வன், எம்.எம்.பாலு, சி.அரங்கநாயகம்,

தவசுமணி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் செ. குறிஞ்சிவாணன், பொன்.பாரி, தி.முத்து, பாத்திமா பீவி, தேவி, விமலாதி, ராஜா, கே.ஆர்.ராமசாமி, முத்துக் குமார், புத்தாம்பூர் சுப்பையா, டி.எம்.ஆர்.ராமமூர்த்தி டி.வளர்மதி, கே. கணபதி, அ.ரெத்தினம், குமரேசன், கருணாகரன், டாக்டர் சுதர்சன், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், அ.பிரபா, தவசுமணி, மேகநாதன், கவிவேந்தன்,

மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன், இரா.தமிழ் ராசு, கவிக்குமார்,

நசுருதீன், விளாப்பட்டி சிவா, முகம்மது ரபீக், சே. அருண்குமார், இளைய ராஜா, அன்சாரி பாஷீத், மு.பி.மணி, மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, வெற்றிச் செல்வன், டாக்டர் சதீஷ், மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, மாலா ராஜேந்திரதுரை, உஷா செல்வம், டி.செல்வம், கை. பழனிச்சாமி மற்றும் அரசு அதிகாரிகள், உறவினர்கள், பொதுமக்கள் , கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

### புதுப்பிக்கப்பட்டு திறக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா –

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களை 200 நாட்களில் 23 லட்சம் பேர் பார்வையிட்டனர்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்!

சென்னை, செப்.14-

புதுப்பிக்கப்பட்டு திறக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களை கடந்த சுமார் 200 நாட்களில், 23 இலட்சத்து 21 ஆயிரம் நபர்கள் பார்வையிட்டிருக்கின்றார்கள் என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (13.09.2024) மெரினா கடற்கரையில் உள்ள முக்கிய சென்னையின் சுற்றுலாத்தலமான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களின் வருகை குறித்தும், கலைஞர் உலகம் பகுதியில் செயல்பட்டு வரும் 7டி திரையரங்கம், பெரிய திரையரங்கம், காட்சியரங்கம், கலைஞர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள செய்யப்பட்டுள்ள பல்வேறு ஏற்பாடுகளை பொதுமக்கள் ஆர்வத்துடன் பயன்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது இளைய தலைமுறையினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றினையும், அவரது சாதனைகளையும் ஆர்வத்துடன் பார்வையிடுவதையும், தன்புகைப்படம் எடுத்துக் கொள்வதையும் கண்டு அவர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

செய்தித் துறையின் சார்பில் பராமரிக்கப்படக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் புதுப்பிக்கப்பட்டும், மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் முழுமையாக பணிகள் பூர்த்தி செய்யப்பட்டும் கடந்த 26.02.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு இன்று வரை இந்த நினைவிடங்களை சுமார் 200 நாட்களில், ஏறத்தாழ 23 இலட்சத்து 21 ஆயிரம் நபர்கள் பார்வையிட்டிருக்கின்றார்கள். அதேபோல, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை ஏறத்தாழ 2 இலட்சத்து 35 ஆயிரம் நபர்கள் இதுவரை பார்வையிட்டிருக்கின்றார்கள். கலைஞர் உலகம் அருங்காட்சியகம் ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் 1700 நபர்கள் பார்வையிடக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து வரக்கூடியவர்களும் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை ஆர்வத்தோடு பார்வையிட்டு வருகின்றார்கள். பொதுமக்களிடம் முத்தமிழறிஞர் அவர்களின் புகழை கொண்டு சேர்க்கும் வகையில் கலைஞர் உலகம் பல தொழில் நுட்பங்களை உள்ளடக்கி வடிமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் இவற்றை பார்வையிட்டு பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் உள்பட பொதுப்பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழகத்திலுள்ள அரசு – அரசு உதவிபெறும் கல்லூரிகளில்

# கல்வியியல் பட்டப்படிப்பு (B.Ed) முதலாமாண்டு மாணவர் சேர்க்கை விண்ணப்பம்!

## அரசு செய்தி வெளியீடு!

சென்னை, செப்.14-

தமிழகத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பு(B. Ed) முதலாமாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான (2024 -2025) விண்ணப்பங்களை www.tngasa.in என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம்.

விண்ணப்பம் பதிவு செய்ய விண்ணப்பக் கட்டணமாக ரூ.500/ செலுத்தப்பட வேண்டும். SC/ST விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கட்டணம் ரூ.250/ மட்டும் செலுத்தினால் போதுமானது. மாணாக்கர்கள் விண்ணப்பிக்கும் போது தங்களது விருப்ப வரிசைப்படி கல்லூரிகளை தெரிவு செய்தல் வேண்டும். இது தொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் எந்தெந்த கல்லூரிகளில் என்னென்ன பாடப்பிரிவுகள், சேர்க்கை எண்ணிக்கை போன்ற விவரங்கள் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப கட்டணம்

விண்ணப்பக் கட்டணத்தை விண்ணப்பதா ரர்கள் Debit Card/Credit Card/Net Banking மூலம் இணையதள வாயிலாக செலுத்தலாம். இணையதள வாயிலாகக் கட்டணம் செலுத்த இயலாத மாணாக்கர்கள் கல்லூரி சேர்க்கை உதவி மையங்களில் "The Director, Directorate of Collegiate Education, Chennai 15" என்ற பெயரில் 16.09.2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் பெற்ற வங்கி வரைவோலை மூலமாகவும் அல்லது நேரடியாகவும் செலுத்தலாம்.

மாணாக்கர் சேர்க்கை வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மாணாக்கர்கள் மேற்குறித்த இணையதளம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்யத் துவங்கும் நாள்: 16.09.2024.

இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள் : 26.09.2024

தொடர்பு எண்: 044 - 24343106 / 24342911

### தாம்பரம் மாநகராட்சி – பெருங்களத்தூர் வடக்குப் பகுதி அவைத்தலைவர்

# டி.ஆர்.கோபி எம்.சி. இல்லத்திருமண வரவேற்பு நிகழ்ச்சி!

## கழக முன்னணியினர் வாழ்த்து!

தாம்பரம், செப். 14-

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி அவைத் தலைவர் தாம்பரம் மாநகராட்சி தி.மு.க. கொறடா டி.ஆர். கோபி இல்ல திருமண விழா மணமகள் டாக்டர் கே. வசுந்தரா (எ) வின்யா மணமகன் வி.பாலாஜி ஆகியோரின் வரவேற்பு விழா நாளை (15.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஸ்ரீ வாரு வெங்கடாஜலபதி பேலஸ் வானகரம் சென்னையில் நடைபெறுகிறது.

தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தலைமை தாங்குகிறார்.

பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் டி.காமராஜ் வரவேற்கிறார்.

கழகப் பொருளாளர், கழக மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு, காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ் பாரதி, கழக உயர் நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் டாக்டர் எஸ் ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் மணமக்களை வாழ்த்தி சிறப்புரையாற்றுகின்றனர்.

விழாவில் காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், திருவள்ளூர் மாவட்ட கழக செயலாளர் மு அமைச்சர் ஆவடி மூ நாசர், சட்ட திட்ட திருத்த குழு செயலாளர்/ மாநிலங்களவை உறுப்பினர் இரா கிரிராஜன் தலைமை தீர்மான குழு உறுப்பினர் மீ.அ.வைத்திலிங்கம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமார் , துணை மேயர் கோ.காமராஜ், சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமை கழக செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் 5வது மண்டல குழுத்தலைவர் தலைவர் எஸ்.இந்திரன் , பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர் மற்றும் மாநகர பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள், அணைகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.

### நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாள்:

# பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

## அரசு செய்தி வெளியீடு!

சென்னை, செப்.14-

தமிழ் வளர்ச்சித் துறையின் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான "நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவரான தந்தை பெரியார் பிறந்த நாள் பேச்சுப் போட்டி 17.09.2024 அன்று நடைபெறுவதாக செய்திக் குறிப்பு வெளியிடப்பட்டது.

தற்பொழுது 17.09.2024 மிலாதிநபி விடுமுறை நாள் என்று அரசால் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளதால் அன்று நடைபெறவிருந்த தந்தை பெரியார் பிறந்த நாள் பேச்சுப் போட்டிகள் 19.09.2024 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்களுக்கு 19.09.2024 அன்று முற்பகல் 09.00 மணி முதல் 12.30 மணி வரையிலும், கல்லூரி மாணவர்களுக்கு 19.09.2024 அன்று பிற்பகல் 02.30 மணி முதல் 5.30 மணி வரையிலும் வட சென்னை அளவில் வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரியிலும், மத்திய சென்னை அளவில் சேப்பாக்கம் மாநிலக் கல்லூரியிலும், தென் சென்னை அளவில் இராணி மேரி கல்லூரியிலும் நடைபெற உள்ளன.



பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு123க்குட்பட்ட நாகேஸ்வரராவ் பூங்காவில் ரூ.6.34 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திடவும், பூங்கா மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடித்திடவும் அலுவலர்களுக்கு துணை மேயர் மு.மகேஷ்குமார் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது, மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், தேனாம்பேட்டை மண்டலக்குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி மோ. சரஸ்வதி, கி. மதிவாணன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று (13.09.2024) சென்னை, மெரினாவில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன். ஆகியோர் உள்ளனர்.